# பல் மருத்துவத் துறையின் நவீன சிகிச்சை முறைகள்

அனைத்து மருத்துவத் துறையைப் போல பல் மருத்துவத் துறையில் கடந்த பாத்து ஆண்டுகளில் பல நவீன சிகிச்சை முறைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றை கீழே காண்போம்.

**லேசர் பல் மருத்துவம்** - லேசர் கதிரின் சில பல் சிகிச்சை முறைகளை வலியின்றி செய்யலாம். லேசர் கருவி மூலம் அதிகமாக வளர்ந்திருக்கும் ஈறுகளை சரி செய்யலாம், பற்களின் வடிவத்தை மாற்றலாம், நாக்கின் அடியில் தசை வளர்ந்தால் அவற்றை சரி செய்து பேச்சு தடை படாமல் செய்யலாம். இந்த சிகிச்சையில் வலியும் இருக்காது. ஈறுகளில் தழும்பும் உருவாகாது.

**தூங்கிக் கொண்டே பல் சிகிச்சை** - பல் சிகிச்சை செய்து கொள்வதற்கு பயப்படுபவர்களுக்கு இது ஒரு வரப்ரசாதமாக அமையும். இந்த சிகிச்சை முறையில் அளவான மயக்க மருந்து கொடுத்து தூங்குவது போன்ற நிலையில் பல் சிகிச்சை அனைத்தையும் செய்யலாம். மயக்க மருந்து நிபுணரின் உதவியோடு பாதுகாப்பாக இந்த சிகிச்சை முறையை கையாள வேண்டும். இதனால் பயமோ மன அழுத்தமோ இல்லாமல் நிம்மதியாக சிகிச்சை செய்து கொள்ளலாம்.

**டென்டல் இம்ப்ளான்ட்** - கழற்றி மாட்டும் பல் செட் கள் போட்டுகொண்டு அவதிபடுவோரின் குறை தீர்ப்பதற்கும் கேப் போடுவதற்கு பல் இல்லாதவர்களுக்கும் இப்பொழுது டென்டல் இம்ப்ளான்ட்கள் பொருத்தி நிலையான பற்கள் கட்டலாம். டென்டல் இம்ப்ளான்ட் என்பது டைட்டேனியம் என்னும் உலோகத்தால் ஆனது. இந்த சிகிச்சை முறையில் தாடை எலும்பில் பல் வேர் இருக்க வேண்டிய இடத்தில் இம்ப்ளான்ட்களை பொருத்தி அதன் மேல் பற்கள் கட்டப்படுகிறது. இதன் மூலம் அனைத்து வயதினருக்கும் குறைந்த கால அளவில் இயற்கை பல் போல் நிலையான பற்கள் கட்டலாம். இந்த சிகிச்சையின் மற்றுமொரு சிறப்பு, இந்த பற்கள் கட்டும் பொது மற்ற பற்களை கரைக்கவோ மாற்றவோ தேவையில்லை. டென்டல் இம்ப்ளான்ட் களினால் மற்ற பற்களுக்கும், ஈறுகளுக்கும், உடலுக்கும் எந்த விதமான பக்கவிளைவுகளோ பாதிப்புகளோ இருக்காது.

**தோற்றம் மாறாமல் கம்பி போடும் சிகிச்சை** - பற்களில் கம்பி போடும் பொழுது உலோகம் தெரிவதை பலர் விரும்புவதில்லை. இன்றைய நவீன சிகிச்சை முறையில் இதற்கு தீர்வுகள் கண்டிப்பாக உண்டு. கம்பி போடுவதற்காக பற்களில் பொருத்தப்படும் பிராக்கெட் என்பவை உலோகத்தால் ஆனது. இப்போது அவை செராமிக்கிலும் கிடைக்கின்றன. இவற்றை பற்களில் பொருத்தும் பொழுது பற்களுக்கும் இவற்றிற்கும் வித்தியாசமே இல்லாமல் இருக்கும். இதனால் உலோகம் தெரிவது போன்ற தோற்றம்

இருக்காது. இதற்கு மற்றொரு தீர்வு இந்த உலோகத்தினால் ஆன பிராக்கெட்களை பற்களின் உட்புறம் பொருத்தலாம். இதற்கு லிங்குவல் ஆர்த்தோடான்டிக்ஸ் என்று பெயர். இந்த முறையிலும் வெளிப்பார்வைக்கு உலோகம் தெரியாமல் இருக்கும். சிகிச்சை காலத்திலும் சுத்தம் செய்யும் முறையிலும் வித்தியாசம் எதுவும் கிடையாது. உங்களுக்கு தகுந்த சிகிச்சை முறையை தேர்வு செய்து அழகான பல் வரிசையை பெறலாம்.

**கணினியில் உருவாகும் பற்கள்** - CAD/CAM என்னும் இந்த நவீன சிகிச்சை முறையில் பற்களின் அளவை கணினியில் பதிவு செய்து அதன் மூலம் மிகத் துல்லியமாக பற்களுக்கு கேப்களை வடிவமைக்கலாம். இம்முறையில் குறைந்த நேரத்தில் பற்களுக்கு கேப் போடும் சிகிச்சையை சிறப்பாக செய்ய முடியும்.

**நுண்ணோக்கியில் வேர் சிகிச்சை** - சில பற்களில் வேர்கள் வெகுவாக வளைந்து காணப்படும். இவற்றை சரியான முறையில் சுத்தம் செய்து அடைப்பதற்கு பல் வேர்களுக்கான நுண்நோக்கியை பயன்படுத்தலாம். இவை நுண்ணிய வளைவுகளையும் வேர்களின் வடிவத்தையும் துல்லியமாகக் காட்டும். இதன் மூலம் எப்படிப்பட்ட வளைந்த வேர் உள்ள பற்களுக்கும் சிறந்த முறையில் வேர் சிகிச்சை செய்யலாம்.

**பாதகமில்லாத பல் எக்ஸ்ரே** - பல் மருத்துவத்தில் எக்ஸ்ரே பயன்படுத்துவது தவிர்க்க முடியாத ஒன்று. ஏனெனில் பற்களில் மற்றும் தாடை எலும்புகளில் ஏற்படும் சில நோய்களை எக்ஸ்ரேயினால் மட்டுமே அறிய முடியும். தற்சமயம் உள்ள நவீன சாதனங்களினால் எக்ஸ்ரே கதிர்வீச்சு வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. எக்ஸ்ரே கதிர் கற்றையை சிறியதாக்கி அவை உடலில் படும் இடமும் சிறியதாக்கபட்டுள்ளது. மேலும் சுருள்கள் இல்லாமல் கணினியில் எக்ஸ்ரேகளை பதிவு செய்வதால் அடிக்கடி எக்ஸ்ரே எடுப்பது தவிர்க்கப் படுகின்றது.

இத்தகைய நவீன சிகிச்சை முறைகளின் மூலம் அணைத்து தரப்பினரும் சிறந்த பல் சிகிச்சைகளை எளிதாகப் பெறமுடியும். இவைகளை பற்றி பல் மருத்துவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு பயன்பெறுங்கள்.

**டாக்டர் ஜெ. கண்ணபெருமான்**

**மதுரை, 94441 54551**

**நளா பல் மருத்துவமனை**

9B/1 வல்லபாய் ரோடு (வடமலையான் மருத்துவமனை அருகில்)

சொக்கிகுளம்,மதுரை– 625002. Phone: 0452 2525205, 9444154551

*ஈமெயில்: info@naladentalhospital.com வெப்சைட்: www.naladentalhospital.com*